DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: STC.No.119/2020**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**<u>Accused present</u>**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.**STC.No.119/2020**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திக் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>11.05.2023</u>**

<u>குறுக்கு விசாரணை:</u>

1. எதிரி குடியிருக்கும் இடம் பெரியார் நகர் ஆகும். பெரியார் நகர் , காட்டுபிள்ளையார் கோவில் தெரு என்பது தனித்தனி தெரு என்றால் சரிதான். எதிரி நகராட்சியில் வேலை பார்க்கிறார் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு காலமாக வேலை பார்க்கிறார் என்று தெரியாது. எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்றும் எனக்கு தெரியாது. எதிரி நிரந்தர பணியாளரா, தற்காலிக பணியாளரா என்றால் நிரந்தர பணியாளர்.

2. எதிரியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 7, 8 வருடமாக தெரியும். அவர் பெரியார் நகரில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எதிரி எனக்கு குடும்பரீதியாக பழக்கமாக என்றால் இல்லை. எதிரியை முதன்முதலில் எங்கு சந்தித்தேன் என்றால் பஸ் ஸ்டாண்டில் ஹோட்டல் வைத்துள்ளேன் அங்கு சாப்பிட வருவார் அப்போது சந்தித்தேன். நான் பஸ் ஸ்டாண்டில் 2016 ல்இருந்து ஹோட்டல் கடை வைத்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியை எத்தனை முறை சந்தித்தேன் என்றால் 10, 11 முறை சந்தித்தேன்.

3. எதிரியை எனக்கு யாரை வைத்து பழக்கம் என்றால் ஹோட்டலுக்கு சாப்பிட வருவார் நகராட்சியில் வேலை பார்ப்பதால் அதன் மூலம் பழக்கம். எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால்

10.10.2019ம் தேதி பணம் கேட்டார். எதிரி என்னிடம் எங்கு வைத்து பணத்தை கேட்டார் என்றால் ஹோட்டலுக்கு சாப்பிட வரும் போது ஹோட்டலில் வைத்து தான் பணம் கேட்டார். எதிரி ஹோட்டலில் வைத்து தான் பணம் கேட்டார் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஹோட்டலில் என்னிடம் வந்து பணம் கேட்ட விபரம் ஹோட்டலில் வேலை பார்க்கும் மற்ற நபர்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது எனக்கு மட்டும் தான் தெரியும். எதிரி பணம் கேட்கும் போது ஹோட்டல் ஊழியர்கள் ஹோட்டலில் தான் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான் ஹோட்டலில் பின்புறம் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

4. ஹோட்டலில் புரோட்டா போடும் கல், மற்றும் மாஸ்டர் அருகே தான் ஹோட்டல் கல்லா பெட்டி உள்ளது என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணம் கேட்கும் போது அன்று காலை 11.30 மணி இருக்கும். 10.10.2019ம் தேதி என்ன கிழமை என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அன்றைய தேதியில் எதிரி நகராட்சி அலுவலகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 11.30 மணிக்கு ஹோட்டலில் காலை சாப்பாடு முடிந்துவிட்டது சாப்பாடு கிடையாது என்றால் சரிதான். எதிரி 10.10.2019ம் தேதி என்னிடம் பணத்தை கேட்டார் அன்றில் இருந்து 3 மாதம் கழித்து பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்றால் சரிதான்.

5. நான் எப்போது பணத்தை தயார் செய்து கொடுத்தேன் என்றால் 20.10.2019ம் தேதி தயார் செய்து கொடுத்தேன். பணம் முழுவதும் எனது கைவசம் இருந்து கொடுத்தேனா என்றால் என்னிடம் ரெக்கமாக 2 இலட்சம் இருந்தது, மீதம் பணத்தை எனது நண்பர்களிடம் வாங்கி கொடுத்தேன். எனது நண்பர்கள் எத்தனை பேரிடம் மீதி பணம் வாங்கினேன் என்றால் இரண்டு பேரிடம் வாங்கினேன். அந்த இரண்டு நண்பர்களின் பெயர் என்ன என்றால் முனியராஜ், வினோத் குமார் ஆகும். முனியராஜ், வினோத் குமாருக்கு எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது நண்பர்களிடம் நகராட்சியில் வேலை பார்க்கும் வேலம்மாள் என்பவர் பணம் கேட்பதாக அவர்களிடம் நான் பணம் கேட்டேனா என்றால் சரியல்ல.

6. முனியராசிடம் ரூ.1 இலட்சமும், வினோத் குமாரிடம் ரூ.1 இலட்சம் வாங்கினேன். அவர்களிடம் எவ்வளவு வட்டிக்கு வாங்கினேன் என்றால் வட்டிக்கு வாங்கவில்லை நண்பர்கள் என்பதால் கைமாறாக கொடுத்தார்கள். நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ, முனியராசிடம் ரூ.1 இலட்சமும், வினோத் குமாரிடம் ரூ.1 இலட்சமும், வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முனியராஜ், வினோத் குமாரிடம் தலா ரூ.1 இலட்சம் பணம் வாங்கியதற்காக இந்த வழக்கில் அவர்களை சாட்சியாக விசாரிக்க சாட்சி பட்டியல் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. நான் எதிரியிடம் பணம் கொடுக்கும் போது தொகை ரெடியாக உள்ளது என்று எதிரியிடம் நேரடியாக சென்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு எதிரியின் வீட்டில் போய் தொகை ரெடியாக உள்ளதாக சொன்னேன். அவ்வாறு வீட்டில் பொய் சொல்லும் போது மாலை 05.30 மணி இருக்கும். நான் எதிரியின் வீட்டில் போய் சொன்னதாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலை எப்போது திருப்பப்பட்டது என்றால் 22.01.2020-ம் தேதி திருப்பப்பட்டது.22.01.2020-ம் தேதி காசோலைதிருப்பப்பட்டது எனக்கு வங்கியில் இருந்த எந்த தேதியில் தகவல் சொன்னார்கள் என்றால் 22.01.2020-ம் தேதி. 22.01.2020-ம் தேதி எனக்கு காசோலை திருப்பப்பட்ட தகவலை வங்கியில் இருந்து என்னிடம் சொன்னதாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 20.10.2019ம் தேதி கொடுத்தேன். 20.10.2019-ம் தேதியில் இருந்து 3 மாத தவணையில் எதிரி பணத்தை திருப்பி தருவதாக கூறினாரா என்றால் சரிதான்.10.10.2019ம் தேதியில் இருந்து 3 மாத தவணை காலம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காசோலையை வசூலுக்காக 20.01.2019ம் தேதி செலுத்துவதற்கு முன்பு எதிரியை எங்கு வைத்து சந்தித்தேன் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து சந்தித்தேன். அது எந்த தேதி என்றால் 18.01.2019ம் தேதி மாலை 6 மணி இருக்கும். 18.01.2019ம் தேதி எதிரியை நான் சந்தித்து காசோலையை திருப்பட்டட்டுவிட்டது அதற்காக உங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்போகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலை திருப்பப்பட்ட விபரத்தினை நான் எதிரியிடம் 23.01.2020-ம் தேதி சொன்னேன். அந்த மாறி நான் தகவல் சொன்னது வீட்டில் வைத்தா இல்லை எதிரி வேலை பார்க்கும் நகராட்சியில் வைத்தா என்றால் வீட்டில்வைத்து தான் சொன்னேன். அதற்கு எதிரி என்ன பதில் சொன்னார் என்றால் 10 நாள் கழித்து பணத்தை கொடுத்துவிட்டு காசோலையை திரும்ப வாங்கிகொள்வதாக சொன்னார். 10 நாள் காலம் என்பது 02.02.2020-ம் தேதி என்றால் 10 நாள் என்று சொன்னார் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை.

9. 10 நாள் கழித்து எதிரியிடம் பணத்தை திருப்பி கொடுங்கள் என்று எந்த தேதியில் கேட்டேன் என்றால் 29.01.2020-ம் தேதி கேட்டேன். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் என்றால் எதுவும் சொல்லவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 31.01.2020-ம் தேதி அனுப்பினேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அது ம.சா.ஆ-3 ஆகும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ-3 நான் அனுப்பவில்லை. நான் பணத்தை திரும்ப கேட்டு எதிரிக்கு 31.01.2020-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ-3 இல்லை என்றால் சரிதான்.

10. எதிரியை நான் எந்த காலத்தில் சந்தித்தது இல்லை என்றால் சரியல்ல. நான் கைமாத்தாக 4 இலட்சம் கொடுப்பதற்கு எதிரி நெருங்கிய பழக்கம் இல்லை என்றால் சரிதான். எதிரி புகாரில் சொன்னது போல் என்னிடம் சொன்ன தேதியில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையில் வேலம்மாளின் கையொப்பம் தமிழிலும், காசோலையில் உள்ள மற்ற எழுத்துக்கள் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணம் எனக்கு கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எனது நண்பர்கள் கொடுத்த காசோலையை நான் எதிரிக்கு எதிராக அந்த காசோலையை பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல எதிரி எனக்கு கொடுத்தது. நான் சொன்னது போல் சொன்ன தேதியில் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

11. காசோலை வசூலுக்காக செலுத்தப்பட்டு திருப்பப்பட்டவுடன் நேரில் சென்று எதிரியிடம் திருப்பப்பட்ட விபரத்தை சொன்னதற்கு 10 நாட்கள் காலம் அவகாசம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு நேரடியாக எந்த பணமும் கொடுக்காததால் எதிரி எனக்கு பணம் கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் lawful consideration இல்லை என்றால் சரிதான். நான் எனது பணத்தை கொடுக்காமல், எனது நண்பர்களிடம் இருந்து வாங்கி கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு எதிரி காசோலை கொடுக்கவில்லை அதனால் எனக்கு பணம் கொடுப்பதற்கு எதிரி கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் முறையாக எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமால் நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.